# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி :.044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 050/ந/2018

ஆணை எண். 64/2018

நாள் : 23/03/2018

திரு எம். மணி,
மேட்டுபாளையம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மேட்டுபாளையம் நகராட்சி,
மேட்டுபாளையம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், மணி நகர், புதிய நகராட்சி காலனி, எண். 102/34-S முகவரியில் வசிக்கும் திரு எம்.மணி அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.03.2018 அன்று பெறப்பட்டு 50/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், மணி நகர், புதிய நகராட்சி காலனி, எண். 102/34-S முகவரியில் வசிக்கும் திரு எம்.மணி என்பவர், மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 10.03.2010 நாளிட்ட கடிதத்தில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றிய தான் 28.02.2007–இல் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தனக்கு 1998–ஆம் ஆண்டு முதல் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து மனுச் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஓய்வு பெற்ற துப்புரவு ஆய்வாளர் திரு எம்.மணி அவர்களின் மனு மீதான நடவடிக்கையை உடன் மேற்கொண்டு சேமநலநிதிக்கான நிலுவை வட்டித் தொகையை வழங்குமாறு மேட்டுபாளையம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இது சம்பந்தமாக மேட்டுபாளையம் நகராட்சி ஆணையரையோ அல்லது திருப்பூர் மண்டல நகராட்சி இயக்குநரையோ தொடர்பு கொள்ளுமாறு முறையீட்டு மனுதாரருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   மேட்டுபாளைம் நகராட்சி,
   மேட்டுபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திரு எம்.மணி,
   102/34, S, புதிய நகராட்சி காலனி,
   மணி நகர், மேட்டுபாளையைம்,
   கோயம்புத்தூர் மாவட்டம்.

3. நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர்,
   திருப்பூர் மண்டலம்,
   திருப்பூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்